புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# சங்க இலக்கியம் காட்டும் சமூக வாழ்வியல்

முனைவர் அ. மோகன்ராஜ், M.A.,M.Phil.,Ph.D.
இணைப்பேராசிரியர் தமிழ்த்துறை
நந்தா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஈரோடு-52

ஆய்வுச் சுருக்கம்

கல் தோன்றி மண்தோன்றா காலத்தே வாளொடு முன் தோன்றிய மூத்தக்குடி என்னும் சொல்லாடல் தமிழ் மொழியின் தொன்மையை விளக்கி நிற்கும். அம்மொழி பேசும் தமிழரின் பண்பட்ட வாழ்வையும் பழம் பெரும் பண்பாட்டையும் பறை சாற்றுகின்ற தமிழ் இலக்கியங்கள் பழந்தமிழர் இலக்கண இலக்கிய வளங்களையும் பண்புசால் உலக இயல்புகளையும் தன்னகத்தே கொண்டு இயங்குகின்றது.

தமிழின் தொன்மையான இலக்கியங்களுள் தனித்துவ இலக்கியக் கூறுகளைக் கொண்டு விளங்குவது சங்க இலக்கியமாகும். இது அகம்,புறம் என்னும் பாகுபாடுகளுடன் பாட்டும் தொகையும் என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தனக்கென தனித்தன்மைப் பெற்று விளங்கி வருகிறது. தொன்மை வாய்ந்த சிறப்பினைக் கொண்டு விளங்குவதால், காலத்தினைக் காட்டும் கண்ணாடியாக சங்க இலக்கிய நூல்கள் விளங்குகின்றன. சங்ககால மக்களின் வாழ்வியலை எடுத்துரைக்கும் விதமாக தமிழர் பண்பாடு, நாகா◌ிகம், கலாச்சாரம், மொழி, மரபு, வரலாறு, கலை, இசை, சமூகப் பொருளாதாம், அரசியல் போன்றவற்றை பாருக்குப் பறைசாற்றி நிற்கின்றன.

திறவுச் சொற்கள்
முன்னுரை, விருந்தோம்பல் பண்பு, வாழ்வியல், பண்புடையார் இயல்புகள், கல்விச்செல்வம், பெண்மையும் கல்வியும், சிறப்பில்லா பொருட்செல்வம், வழிபாட்டு முறை, நிறைவாக

## முன்னுரை

பண்பாட்டு மக்கள் உள்ளம் பற்றியே பெருவழக்காகப் பேசப்படுகின்றது. ஆங்கிலத்தில் (CULTURE) என்னும் சொல் சிறப்பாக உளப்பண்பாட்டைக் குறிக்கின்றது. பண்பாடு, அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டங்கள், வழக்கம் முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும் பழக்கங்களும் அடங்கிய தொகுதியாகும் என்கின்றனர் நம் பண்பாட்டு தொன்றுதொட்டுப் பேணி வரப்படுகிறது. பொருளாதாரத்தில் உயர்ந்தவராலும், தாழ்ந்தவராலும் பண்பாட்டு போற்றப்பட்டு வருகிறது.

> “பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இதுவே பிற உயிரினங்களிலிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது. மனிதன் மட்டுமே பண்பாட்டைக் கொண்ட விலங்காவான்” (தமிழர் பண்பாட்டு மானிடவியல்)

என்று பக்தவத்சல பாரதி கூறியுள்ளார்.

> “பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்” (கலித்தொகை -133)

என்கிறது கலித்தொகை. பண்பாடு என்பது குறிப்பிட்ட சமூகத்தின் அடையாளக் குறியீடு ஆகும். மனிதனின் பண்பட்ட நிலையைக் கூறுவதாகும். பன்னெடுங்காலமாக பின்பற்றப்படும் மக்களின் பண்பட்ட நிலையே பண்பாடு. எல்லோருடைய பண்புகளையும் அறிந்து அவரவர்களுக்கேற்ப ஒத்து நன்னெறியில் பழகுதலே பண்பாடு ஆகும் என்று பேராசிரியர்

எஸ்.வையாபுரி பிள்ளை கூறுகிறார். மேலும், மக்களின் பண்பாட்டு முறையானது மக்களின் பழக்கவழக்கங்கள், நீதிநெறிமுறைகள், சமூக ஒழுக்கம், வழிப்பாட்டுமுறை, திருமணமுறை, நம்பிக்கைகள் போன்ற பல கூறுகளை உள்ளடக்கியதாக திகழ்வதால் சமூகத்தின் உறவுகள் மேன்மேலும் வலுப்பெற்று அமைகின்றன.

விருந்தோம்பல் பண்பு

விருந்து என்பதற்குப் புதுமை என்பது பொருளாகும். நேற்று வந்தவர் இன்று வந்தவர் என்ற எண்ணம்இல்லாமல் தம்மை நாடி வருபவர் எவராயினும் உபசா ீத்து விருந்து அளித்திருக்கின்றனர் இல்வாழ்க்கை வாழ்பவரின் கடமைகளில் ஒன்றாக விருந்தோம்பல் இருந்திருக்கிறது. வள்ளுவரும் விருந்தோம்பல் என்பதற்குத் தனி அதிகாரத்தை வகுத்துள்ளார்.

"வித்தும் இடல்வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்" (குறள் 85)

வந்த விருந்தினரை முன்னே போற்றி, உணவளித்து மிஞ்சிய உணவை உண்டு வாழ்கின்றவனுடைய நிலத்தில் விதை விதைக்க வேண்டியதில்லை என்றும் விருந்தின் சிறப்புகளை மிகவும் அழகாகக் கூறியுள்ளார் வள்ளுவர். பெண்களுக்குரிய பண்புகளில் ஒன்றாக விருந்து அறியப்படுகிறது. விருந்து உபசரிப்பின் மூலம் அகமகிழ்வு கொண்டிருக்கின்றனர். விருந்தால் இல்லத்தில் தலைவன், தலைவியுடன் ஊடல் தீர்க்கப்பட்டிருக்கிறது. பிரிந்து சென்ற தலைவன் நினைவை மறப்பதற்கும், தலைவன் விரைவில் திரும்பி வருவதற்கும் விருந்து படைப்பதில் தலைவியர் ஆர்வம் காட்டியிருக்கின்றனர். தமிழர்களின் விருந்தோம்பலை ஊன்முறை என்றும் கோன்முறை விருந்து என்று குறிப்பிடுகின்றனர்

விருந்து என்று ஏற்பதில் சங்ககாலம் தொட்டு இன்று வரையிலும் சிறப்பாகச் செய்யப்பட்டு வருகிறது. அத்தகைய விருந்தோம்பல் ஆற்றுப்படை நூல்களாகிய பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, மலைபடுபடாம் என்னும் கூத்தாற்றுப்படை ஆகியவற்றிலும் காணப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் இல்லறப் பண்பாக பெரிதும் வலியுறுத்தப்படுவது விருந்தோம்பல் ஆகும். விருந்தினரைப் போற்றும் மாண்பு சங்க இலக்கியத்தின் தலையாயப் பண்பாகும். நம் பழந்தமிழர், காக்கை கரைதலை வைத்தே விருந்தினர் வரவை விருப்பத்துடன் எதிர்நோக்கினர் என்பது,

" விருந்து வரக்கரைந்த காக்கையது பலியே" (குறுந்.210)

என்ற வரியின் மூலம் நமக்கு புலனாகிறது. காக்கை கரைவது விருந்தினர் வரவை உணர்த்துவதற்கே என்ற பழந்தமிழரின் மரபு விருந்தோம்பல் பண்பை நமக்கு புலப்படுத்துகிறது. தன் வீட்டிற்கு வந்தவர்களுக்கு மனம் மகிழும் வண்ணம் அமுது படைப்பது தமிழரின் மனமுவந்தப் பண்பாகும்.இரவில் வாயில்கதவைத் தாழிடுவதற்கு முன்பு யாராவது வழிபோக்கா; திண்ணையில் பசியுடன் உள்ளனரா? பசியுடன் இருந்தால், அவர்களின் பசியைப் போக்க, அவர்களுக்கு உணவிடுவது விருந்தோம்பல் மாண்மையாகும்.

வாழ்வியல்

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் " (குறள் 50)

வாழவேண்டிய வழி வகைகளைத் தெள ீந்து அதற்கேற்ப நம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு வாழ்வதே வாழ்வு. இவ்வாழ்விற்கு வழிக் காட்டுவது தமிழ் இலக்கியங்கள்.

இவ்வுலகில் எப்படி வாழவேண்டும் என்னும் தெளிவோடு வாழ்பவனே வாழ்வாங்கு வாழ்பவன் என்றும் அவன் தெய்வத்தோடு ஒத்து மதிக்கப்படுவன் என்றும் கூறியுள்ளதை அறிவுறுத்துகின்றது.

தமிழர்கள் ஒழுக்கத்தை உயிரினும் மேலாகப் போற்றுவது தனி மனித ஒழுக்க மட்டுமல்லாமல் சமுதாய ஒழுக்கம் சிதையாதிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவதை காணலாம். அறம், பொருள், இன்பம் மூன்றையும் முறைப்படுதுத்தி அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்றைப் பற்றி விவரிக்கும் வகையில்

"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிப்படு உற்தோற்றம் போல" (புறம் 31)

இப்பாடலின் வழி, அறத்தின் வழிப்படுவனவாகப் பொருளையும் இன்பத்தையும் சுட்டப்படுகின்றது.

பண்புடையார் இயல்புகள்

தமக்கென வாழாது பிறர்க்கென வாழ முயலுதலே கிடைத்தற்கு அரிய அமுதமே கிடைப்பினும் தாமே உண்ணாது பிறருடன் பகிர்ந்து உண்ணுதல், வாழ்வில் வெறுப்பற்று இருத்தல். மடியை மடியாக் கொண்டு ஒழுகுதல், தீயவற்றிற்கு அஞ்சுதல், தம் செயலால் புகழ் உண்டாகுமானால் உயிரையும் கொடுத்துக் கடனாற்றுதல், உலகத்தையே கொடுத்தாலும் பழியொடுபடும் செயலைச் செய்யாதிருத்தல், தாம் மேற்கொண்டுள்ள கருமத்தில் அயர்வற்று இருத்தல் என்பவை உயர் பண்புடையார்க்குரிய இயல்புகளாக தமிழ் இலக்கியங்களின் வாயிலாக சமுதாய சிந்தனைகளுக்கு உரம் போல் பயன்படுவதை எடுத்துரைக்கிறது.

கல்விச்செல்வம்

பண்புடைமையே மக்களை மாக்களின்றும் பிரித்து உயா;த்துவதாகும். பண்படுத்தப்படும் வயல் நல்ல விளையுளைத் தருதல் போன்று பண்படுத்தப்படும் உள்ளமும் உலகிற்கு உயர் பயனை நல்கும் என்பதை அறியலாம். பண்புடையாளரால் உலகம் வாழ்கின்றது என்;று திருவள்ளுவர் தெளிவுறச் சுட்டுவதை,

“பண்புஉடையார்ப் பட்டுண்டு உலகம் அதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்” (குறள் 996)

என்னும் குறளடிகள் கல்வி கேள்விகளாற் சிறந்து கூர்ந்த மதியுடையராயினும் மக்கட்கே உயரிய பண்பினைப் பெற்றிராவிடின் அவர் மரத்துக்கே ஒப்பாவார் என்பதும் திருவள்ளுவரின் சீர்சால் கருத்தாகும் என்பதை புலப்படுத்துகின்றது. இக்குறள் வழியே கல்விச் செல்வமே சிறந்த பண்புடைமையாகும் என்பதை வலியுறுத்துகின்றது.

பெண்மையும் பெண்கல்வி

பெண்ணே குடும்பத்திற்கு விளக்காக அமைபவள். திருமகளுக்கு ஒப்பாகப் பெண்களைக் கூறுவதும் உண்டு. பெண்மையின் சிறந்த குணங்களே வாழ்க்கைக்குச் சிறப்பளிப்பவை. பெண்ணின் பெருந்தக்க யாவுள என்று வள்ளுவப்பெருந்தகையும் பெண்மையைப் போற்றுகிறார்.

“மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
மாதவம் செய்திட வேண்டுமம்மா!”

என்று கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை பெண்ணாய் பிறப்பதே மிகப் பொ◌ிய பேறு என்கிறார். சமூகத்தில் பெண்களை அடக்கி ஆளும் அடிமைத்தனம் களையப்பட வேண்டும் என்று பெண்களின் உரிமைக்காகக் குரல் எழுப்பினர் பாரதியார். பெண்ணை உயர்வாக மதிக்காத சமூகமோ வீடோ நன்மதிப்பைக் காண இயலாது என்கிறார் பாரதிதாசன். இதனை,

“பெண்ணடிமைதீருமட்டும் பேசும் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்துவருதல் முயற்கொம்பே “
( பாரதிதாசன் கவிதைகள் -சஞ்சீவி பர்வதத்தின் சாரல்)

என்று தம் பாடல்கள் மூலம் சமூகத்தின் அறைகூவல் விடுக்கின்றார். பெண்ணை மலராகவும், நதியாகவும், சந்திரனாகவும் படைத்துக்காட்டுகின்றனர் நம் கவிஞர் பெருமக்கள் பெண் என்றால் மென்மை உடையவள் என்ற கருத்து சமூகத்தில் ஆழம்பதிந்துவிட்டது. ஆண்களுக்கு இருக்கும் வீர உணர்வுபோலவே பெண்களிடமும் வீர உணர்வு உண்டு. அது அடிமைத்தனம் என்ற பெயரில் அடக்கப்பட்டு இருக்கிறன்றது. இயல்பாகவே பெண்கள் உடல்வலிமையும், உள்ள வலிமையும் உடையவர்கள் இதனை,

“உயியல்ல மாதர் வலக்கை – தீயர்
உயிரை இடிக்கும் உலக்கை ( பாரதிதாசன் கவிதைகள்)

என்று பெண்மையின் தீரம்பற்ற வீர ஆவேசம் முழங்க உரைக்கின்றார். பாவேந்தர் பெண்களை அடிமைகளாய் நடத்தி, அறிவற்ற பேதையராய்ச் செய்துவிடில் அப்பெண்கள் பெற்ற பிள்ளைகளும் அறிவினில் குன்றியிருப்பர் என்கிறார்.

*சிறப்பில்லா பொருட்செல்வம்*

*பொருளுக்காகத் தலைவன், தலைவியைப் பிரிய நோ;கிறான். இல்லறத்தில் இருக்கும் தலைவி, தலைவனைப் பிரிந்து இல்லற இன்பதைத் துறப்பது ஏற்றதன்று என்று எண்ணிய தோழி, பிரிந்து செல்லும் தலைவனைத் தடுக்க முற்படுகிறாள்.*

*"வைகல் தோறும் இன்பமுமத் இளமையும்*
*எய்கணை நீலின் கழியும்'.. (நற்றிணை - 46)*

*உரிய பருவம் மாறினால் எய்யும் அம்பானது மெள்ளச்சென்று பாய்ந்து அழியும், அதுபோல காலத்தை நுகராத இன்பமும் அழியும் என்றும் இல்லற இன்பமே சிறப்புடையதென்;றும், அதனை நுகர்தலே இல்லற அறம் என்பதைப் பற்றியும் சிறப்பில்லா பொருட்செல்வத்தைப் பற்றியும் தோழி, தலைவனுக்கு உணர்த்துகிறாள். இல்லற அறமே சிறந்த அறமாகப் போற்றப்படுவது சமுதாய நலனுக்கு வலுசேர்ப்பதாய் அமைகிறது.*

*வழிப்பாட்டு முறை*

*ஒரு செயலினைத் தொடங்கும் முன் கடவுளை வழிபடும் முறை சங்க காலம் முதல் இன்று வரை காணப்படுகிறது. வழிப்பாட்டின் மூலம் நன்னெறியைப் பின்பற்றச் செய்ய வேண்டும் என்ற உயர்ந்தக் கொள்கை பின்பற்றப்படுகிறது.*

*"மாயோன் மேய காடுறை உலகமும்*
*சேயோன் மேய மைவறை உலகமும்*
*வேந்தன் மேய தீம்புனல் உலகமும்*
*வருணன் மேய பெருமணல் உலகமும்*
*முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச் ''!*
*(தொல்காப்பியம்-பொருளதிகாரம்-அகத்திணை இயல்-பாடல் எண்:5)*

*ஐவகை நிலங்களுக்குரிய தெய்வங்களைத் தொல்காப்பியம் சுட்டுகிறது.*

*போர் முறை*

*சங்கக் கால வேந்தா;கள் போருக்கு படையெடுத்துச் செல்லும் போது அவ்வேந்தனின் சின்னம், படையின் வலிமை, அரசனின் ஆட்சிச் சிறப்பு போன்றவை வெளிக்காட்டப்படுகிறது.*

*"வெண்கோட்டு இரும்பிணம் குருதி ஈர்ப்ப" (பெரும் - 414-417)*

*என்ற பாடல் வரிகளில், தன் மேல் படையெடுத்து வந்த பகைமன்னரை இளந்திரையன் ஓட ஓட விரட்டினான் என்று திரையனின் சிறப்பை கூறவந்த ஆசிரியா; அவனின் போர்கள் வீரச் செயலுக்கு, மகாபாரதத்தில் கௌரவர் நூற்றுவரும் பாண்டவர் ஐவருடன் போரிட்டு இறந்துபட்ட செயலை உவமையாக்கியுள்ளார்.*

*நிறைவாக*

*சங்ககால மக்களின் பண்பாட்டு விருந்தோம்பலால் சிறப்பு பெறுகிறது. உணவை விட மானம் முக்கியம் என்பதை உணா;ந்த வள்ளல்கள், முதலிய தூய ஆடைகளை உடுக்கத் தந்துள்ளனா;. விருந்தோம்பல் பெண்களால் செய்யப்பட்டிருக்கிறது. உயா;ந்த உணவுகளை ஒளிமிக்க கலங்களில் வழங்கியுள்ளனர்.விருந்தில் ஊன் உணவும் இடம் பெற்றிருக்கிறது. விருந்தினரை எதிர்பார்த்திருந்து உணவளித்துள்ளனர். பண்பாட்டைத் தலைநிமிரச் செய்வதே விருந்தோம்பலாகும் என்பது நிலை நாட்டப்படுகிறது. அக்காலப் பெண்களைப் போல் நாமும் வந்தவர்களை மனம் நிறைய வரவேற்றுத் சுற்றத்தார்களிடம் பழகி நம் பண்பாட்டை வளர்ப்போம், போற்றுவோம்.*

*ஆண் பெண் ஒருமித்த அன்பு கொண்டு அவ்விருவருமே கற்பொழுக்கம் பூண்டு குடும்பம் எனும் சமுதாய அமைப்புக்குள் வருவதைக் காணமுடிகிறது. களவொழுக்கத்திலிருந்து உடன்போக்கு, திருமணம் எனும் இச்செயல்களுக்குச் சிலம்பு கழிதலும், பூச்சூடுதலும் ஒரு குறியீடாக இருக்கிறது. அன்பு கொண்டவனையே கைப்பிடிக்கும் போக்கானது மக்களின் காதல் திண்மையைக் காட்டுகிறது. ஆகையால் சங்க இலக்கியப் பாடல்களும் காதலையும் வீரத்தையும் போற்றியது. ஆண்மகனுக்குரிய நற்பண்புகள் ஒருபக்கமும், அவனுடைய ஒழுக்கநெறியைச் சுட்டிக் காட்டும் விதமும், இல்லற வாழிவில் ஒருவரை ஒருவர் பிரிந்து வாழும் சூழலில் அவர்கள்*

*மனம் படும் பாட்டையும் எடுத்துரைக்கும் புலவர்களின் சொல்நயம் நோக்கத்தக்கது. சமுதாய மேம்பாட்டிற்கும் சமூக உறவுகளின் நிலைப்பாட்டிற்கும் பண்பாடு ஒரு பாலமாக அமைகிறது.*

*துணைநின்ற நூல்கள்*


1. *தமிழர் பண்பாட்டு மானிடவியல், பக்தவத்சல பாதாரி (மெய்ப்பன் பதிப்பகம்- 2003)*
2. *சங்க இலக்கியம் தொகுதி -2 பேராசிரியர்.எஸ் வையாபுரிப் பிள்ளை (முல்லை நிலையம்)*
3. *தமிழர் பண்பாடு, பேராசிரியா; எஸ் வையாபுரிப் பிள்ளை (முல்லை நிலையம் -1949)*
4. *பாரதிதாசன் கவிதைகள், ( நான்கு தொகுதிகள்- ஸ்ரீ இந்து பதிப்பகம்)*
6. *தொல்காப்பியம், பொருளதிகாரம் ( கௌரா பதிப்பகம்)*


********* ********* ********** ********* ********* ********** ********** **********